முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ.எண். 387/2023

| | | |
|---|---|---|
| பிரதிவாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | அர்ஜீணன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | பீமபிள்ளை |
| வயது | .. | 69 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | ஆயர்வாடி |
| வட்டம் | .. | கலவை |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04ஆம் நாள் புதன்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

நான் பி.யூ.சி வரை படித்துள்ளேன். வாதி எனக்கு யார் என்று தெரியாது. பிச்சாண்டி என்பவரை தெரியும். பிச்சாண்டியை 15 ஆண்டுகளாக தெரியும். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக வேலைசெய்து ஓய்வு பெற்றுவிட்டேன். என் சகோதரியின் நிலத்திற்கு எதிரே பிச்சாண்டியின் நிலம் இருக்கிறது. வாதியிடம் ஒரே ஒருமுறைதான் ரூ.2,00,000/- வாங்கினேன். 2 பாண்டில் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி பாண்டு செய்யாறு அடகு கடையில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரிதான். பாண்டு எழுதும்போது ஒருவர் தான் அங்கிருந்தார். பாண்டில் யார் சாட்சி கையெழுத்து போட்டார் என்று எனக்கு தெரியாது. சாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடைய மகன் கையெழுத்து தான். என் மகன் என் முன்பாக

போட்டார். பிச்சாண்டி என்பவர் யார் என்று தெரியாது. என் மகன் வழக்கறிஞராக ஆகி 11 வருடம் ஆகிறது. அவர்தான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். இரண்டு பாண்டுகளும் ஒரே நாளில், ஒரே தேதியில் கையெழுத்து வாங்கப்பட்டது. வாதி என்மீது எவ்வளவு ரூபாய்க்கு பாண்டு கேஸ் போட்டார் என்று தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் வரவில்லை. வா.த.சா.ஆ.3ல் உள்ள அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஞாபகமில்லை. எனது சார்பாக திரு. சங்கர பாண்டியன், வழக்கறிஞர் மூலமாக பதிலறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அது வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சொல்லிதான் எனது வழக்கறிஞர் பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.4ல் வாதியிடம் ரூ.1,00,000/- பெற்றுக்கொண்டு ரூ.2.00 வீதம் வட்டி வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இதுவரை ரூ.2,00,000/- கடன் வாங்கியதற்கு ரூ.2,65,000/- திருப்பி செலுத்தியுள்ளேன். மேற்படி தொகையை நான் மாதம்மாதம் நேரடியாக பணம் கொடுத்து மற்றும் தனலட்சுமி வங்கி கணக்கில் எனது மகன் மூலம் கொருக்காத்தூர் கரூர் வைசியா வங்கிகணக்கிலிருந்து அனுப்பப்பட்டது. மாதம்மாதம் ரூ.4,000/-கொடுத்து வந்தேனா என்றால் கொடுத்து வந்தேன். அவ்வாறு சுமார் 1 1/2 வருடங்களுக்கு வட்டி செலுத்திவந்தேன். மீதி ஒருவருடத்திற்கு வங்கி மூலம் அனுப்பியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி விவரத்தை எனது பதிலறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பாண்டு எழுதிகொடுத்து 2 1/2 ஆண்டுகளில் பைசல் செய்துவிட்டேன். அதன்பின்பு பாண்டை திருப்பிதர கேட்டுவந்தேன். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் அல்லது சட்டத்தின் மூலம் பாண்டை திருப்பிதர நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். என் மகன் வாங்கிய கடனுக்காக வாதிக்கு அவர் வங்கிகணக்கிலிருந்து பணம் அனுப்பினார் என்றும் நான் வாங்கிய கடனுக்கு பணம்

அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கும் என் மகனுக்கும் தொழில் சம்மந்தமாக உறவு இருந்தநிலையில் அப்போது கொடுக்கல் வாங்கல் மூலமாக கொடுத்த பணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. என் மகன் வங்கி கணக்கின் மூலம் செலுத்திய பணத்திற்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. பதிலறிவிப்பு கொடுக்கும்போதே வாதிக்கு வங்கி மூலமாக பணம் செலுத்திய விவரம் இருந்தது. அந்த விவரத்திற்கான தேதிகளை பதிலறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் மகன் அனுப்பிய பணத்திற்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் அவ்வாறு சம்மந்தமிருந்திருந்தால் பதிலறிவிப்பில் சொல்லியிருக்கவேண்டும் என்றும் தற்போது பின் யோசனை செய்து என் மகன் அனுப்பிய தொகையை வைத்து எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். பாண்டு சம்மந்தமாக பணம் அல்லது வட்டியை பகுதியாக செலுத்தினால் அது சம்மந்தமாக பாண்டில் வரவுவைக்கவேண்டுமென்ற விவரம் தெரியும் என்றால் வருடத்திற்கு ஒருமுறை செல்லு வைக்கவேண்டும் ஆனால் நம்பிக்கையின் பேரில் அவ்வாறு செய்யவில்லை. நான் எவ்வளவு வட்டிக்கு ஒப்புக்கொண்டு கடன் வாங்கினேன் என்று சொன்னால் மாதம் ரூ.2.00-க்கு வாங்கினேன். எனக்கும் வாதியின் கணவர் பிச்சாண்டிக்கும் வழக்கு தாக்கல் செய்யும் வரை எந்த விரோதமும் இல்லை என்று சொன்னால் விரோதம் எதுவும் இல்லை. நான் அவ்வாறு பணத்தை திருப்பி செலுத்தியிருந்தால் பாண்டை திரும்ப வாங்கியிருப்பேன் என்றும் அல்லது பாண்டில் வரவு வைத்திருப்பேன் என்றும் அல்லது வழக்கறிஞர் அறிவிப்பாவது அனுப்பியிருப்பேன் என்றும் அவ்வாறு செய்யாததால் நான் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்தியிருப்பேன் என்றால் நான் நம்பிக்கையில் பெயரில் பாண்டை கேட்கவில்லை. நம்பிக்கையின் பேரில் பாண்டை வாதியிடம் திருப்பிகேட்கவில்லை என்பது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. எனக்கும் வாதியின் கணவருக்கும் எந்தவித விரோதமும் இல்லாத நிலையில் இருக்கும்

பட்சத்தில் நான் பணம் திருப்பி செலுத்தியிருந்தால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே வாதியின் வழக்கு உண்மையானது என்றும் அதனால் நான் கடனை திருப்பி செலுத்தவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**